TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION

PRESS RELEASE

DEPARTMENTAL EXAMINATIONS – MAY 2021

Press Release No. 14 / 2021 Date: 10.04.2021

The Departmental Examinations are being conducted by the Tamil Nadu Public Service Commission twice a year during the months of May and December based on the syllabus and pattern lastly revised during the year 2017.

In order to streamline the conduct of Departmental Examinations, Tamil Nadu Public Service Commission is introducing Online Examination from the upcoming Departmental Examinations which are to be held in the month of June 2021.

Based on the suggestions received from various departments, the revised syllabus and pattern have been hosted in the Commission's website www.tnpsc.gov.in.

With the introduction of Online Examinations, the following steps are undertaken:

- The Departmental Examinations for Objective Type tests will be conducted in Computer Based Online Test method.
- In respect of Descriptive Type tests the existing method of manual written examination shall continue.
- In respect of Departmental Examinations for which a combination of both Objective and Descriptive type tests is mandatory, the candidates shall have to appear for Computer Based Online Test for Objective Type and Written Test for Descriptive Type separately.

It has also been decided to implement the above pattern and syllabus from the forthcoming Departmental Examinations to be held tentatively as given below:

- The Computer Based Online Test will be conducted from 22.06.2021 to 26.06.2021.
- The Descriptive Type Written Test will be conducted from 27.06.2021 onwards.
- The candidates appearing for the Departmental Examination which is a combination of both Computer Based Online Test and Descriptive Type Written Test shall have to appear for Objective and Descriptive type separately on the dates allotted to them.

Prospective candidates for the Departmental Examinations are advised to update themselves by checking the details in the Commission's website.

Controller of Examinations

<u>தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்</u>

<u>செய்தி வெளியீடு</u>

<u>துறைத் தேர்வுகள் - மே **2021**</u>

<u>எண். **14/2021**</u> <u>நாள் : **10.04.2021**</u>

கடந்த **2017** ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்டம் மற்றும் தேர்வு முறைப்படி துறைத் தேர்வுகள், வருடத்திற்கு இரு முறை, அதாவது மே மற்றும் டிசம்பர் மாதங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

துறைத் தேர்வுகளின் நடைமுறையினை சீரமைக்கும் பொருட்டு, தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் ஜூன் **2021** ல் நடைபெறவிருக்கும் துறைத் தேர்வுகளில் கணினி வழித் தேர்வினை அறிமுகப்படுத்துகிறது.

பல்வேறு துறைகளிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்களின் அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்டம் மற்றும் தேர்வு முறை, தேர்வாணைய இணையதளம் www.tnpsc.gov.in-ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது

கணினி வழித் தேர்வினை அறிமுகப்படுத்துவதற்கிணங்க பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

- கொள்குறிவகை தேர்வுகளுக்கான துறைத் தேர்வுகள் கணினி வழித் தேர்வாக நடைபெறும்.

- விரிந்துரைக்கும் வகையிலான துறைத் தேர்வுகளைப் பொருத்தமட்டில் தற்போதுள்ள நடைமுறையான எழுத்துத் தேர்வு (Manual Written Examination) வகையிலேயே தொடரும்.
- கொள்குறிவகை மற்றும் விரிந்துரைக்கும் வகை எழுத்துத் தேர்வுகளை கட்டாயமாக ஒருங்கிணைத்து எழுத வேண்டிய துறைத் தேர்வுகளை பொருத்தமட்டில் தேர்வர்கள் கொள்குறிவகையிலான கணினி வழித் தேர்வு மற்றும் விரிந்துரைக்கும் வகை எழுத்துத் தேர்வுகளுக்கு தனித்தனியே தேர்வெழுத வேண்டும்.

மேற்கூறிய பாடத்திட்டம் மற்றும் தேர்வு முறை நடைபெறவிருக்கும் துறைத்தேர்வுகளிலிருந்து உத்தேசமாக பின்வருமாறு நடத்தப்படவுள்ளது.

- கணினி வழி தேர்வுகள் **22.06.2021** லிருந்து **26.06.2021** வரை நடைபெறும்.
- விரிந்துரைக்கும் வகை எழுத்துத் தேர்வுகள் **27.06.2021** லிருந்து நடைபெறும்.
- கொள்குறிவகை மற்றும் விரிந்துரைக்கும் வகை எழுத்துத் தேர்வுகளை ஒருங்கிணைத்து எழுதவிருக்கும் தேர்வர்கள் கொள்குறிவகையிலான கணினி வழித் தேர்வு மற்றும் விரிந்துரைக்கும் வகை எழுத்துத் தேர்வுகள் அவற்றிற்கென ஒதுக்கப்பட்ட இரு வேறு தினங்களில் தேர்வெழுத வேண்டும்.

நடைபெறவிருக்கும் துறைத்தேர்வினை எதிர்கொள்ளும் தேர்வர்கள் தேர்வாணைய இணையதளத்தினை தொடர்ந்து கண்காணிக்கும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்

தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர்